# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

2023 யூலை

## கட்டடவாக்கம்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கட்டடவாக்கத் தொழிற்துறை 2023 யூலையில் குறைவடைந்த மட்டத்தில் தொடர்ந்தும் செயலாற்றி 43.2 கொண்ட மொத்த நடவடிக்கைச் சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** பதிலிறுப்பாளர்கள் குறிப்பிடுவதற்கமைய, சவால்மிக்க தொழிற்துறை சூழலுக்கு மத்தியில் அநேகமான நிறுவனங்கள் உறங்குநிலையிலேயே காணப்பட்டன. எனினும், பொருட்கள் செலவில் படிப்படியான வீழ்ச்சியானது மட்டுப்படுத்தப்பட்ட முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்களுக்கான ஆக்கபூர்வமான சூழலொன்றினை வழங்கியது. மேலும், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சில அரசாங்க நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மாதகாலப்பகுதியில் ஓரளவு மீளத்தொடங்கப்பட்டன.

யூலையில் குறைவான வேகமாயினும் புதிய கட்டளைகள் சுருக்கமடைந்தன. வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்களுக்கான விலைக்கோரல் சமர்ப்பிக்கின்ற வாய்ப்புக்கள் அநேகமாக மட்டுப்படுத்தப்பட்டு காணப்படுகின்ற அதேவேளை, தனியார் சேவைநாடிகள் மேலும் செலவு குறைப்புகளுக்காக இன்னும் காத்திருக்கின்றனர் என பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். மேலும், கருத்திட்டங்களை கொண்டிருக்கின்ற நிறுவனங்கள் மேலதிக இயலளவுகளை கொண்டிருப்பதனால் துணை ஒப்பந்த வாய்ப்புகளும் பற்றாக்குறையாக உள்ளன. அதேவேளை, முக்கிய அலுவலர்களை மாத்திரம் தக்கவைப்பதற்காக நிறுவனங்கள் முனைந்தமையினால் மாதகாலப்பகுதியில் தொழில் நிலையானது மேலும் வீழ்ச்சியடைந்தது. மேலும், அநேகமான நிறுவனங்கள் பொறுத்திருந்து பார்ப்போம் என்ற நிலையில் காணப்படுகின்றமையினாலும் குறுகிய காலத் தேவைப்பாடுகளை மாத்திரம் பூர்த்திசெய்வதனாலும் கொள்வனவுகளின் அளவு மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரமானது மாதகாலப்பகுதியில் உறுதியாகக் காணப்பட்டதுடன் வழங்குநர் கொடுகடன் வசதிகளும் கிடைக்கப்பெறத்தக்கனவாகவுள்ளன என சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

| மாறி | யூன். | யூலை. | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **மொத்த நடவடிக்கை** | **44.4** | **43.2** | - | **வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 38.9 | 45.9 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 30.6 | 29.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 41.7 | 39.2 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 47.2 | 50.0 | + | குறுக்கமடைவதிலிருந்து நடுநிலை |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் மீட்சி, வட்டி வீதங்கள் மற்றும் பொருட்கள் செலவுகளில் குறைவு அத்துடன் இடைநிறுத்தப்பட்ட அரசாங்க நிதியளித்தல் கருத்திட்டங்களை மீளத்தொடங்குவது பற்றிய தற்போதைய பேச்சுவார்த்தைகள் என்பனவற்றின் பிரதான காரணமாக அடுத்துவரும் மூன்று மாதங்களை நோக்கி நிறுவனங்கள் மத்தியிலான எண்ணப்பாங்கு பரந்தளவில் சாதகமாக காணப்பட்டது.

**மொத்த நடவடிக்கைச் சுட்டெண் அளவு**

**43.2**

2023 யூலை

**கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *தொகுத்தல்: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்[1]*

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்கும்.

கொ.மு.சு =50; துறையானது நடுநிலையில் காணப்படுகிறது

கொ.மு.சு >50; துறையானது பொதுவாக விரிவடைகிறது

கொ.மு.சு <50; துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது

### *மாறிகள் பற்றிய வரைவிலக்கணங்கள்:*

மொத்த நடவடிக்கை: கட்டடவாக்க நடவடிக்கையின் மொத்த அளவு, பன்னாட்டு நடத்தையினைப் பின்பற்றி 'கட்டடவாக்க கொ.மு.சு' ஆக குறிப்பீடு செய்யப்படும் முதன்மைச் சுட்டெண் இதுவாகும். இது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் தொழில்நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

தொழில்நிலை: நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை

கொள்வனவுகளின் அளவு: உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்

நிரம்பலர் விநியோக நேரம்: கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு

ஏனைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.

### *அளவீட்டு பதிலிறுத்தல்கள்*

மாதத்திற்கு மாதம் அபிவிருத்திகளைக் எடுத்துக்காட்டுவதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுத்தல்களை உள்ளடக்கி கட்டடவாக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட உயர்தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்க கம்பனிகளை இலக்காகக் கொண்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது.

---

[1] உலகளாவிய தொகுப்பாளராக இனங்காணப்பட்டு உலகளவில் 40 ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சுட்டெண்களை தொகுக்கின்ற எஸ்அன்ட் பி குளோபல் நிறுவனத்தால் பின்பற்றப்படும் முறையியல் பயன்படுத்தி கொ.மு.சு தொகுக்கப்படுகின்றது.